விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 27
ஒலி 209 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 30 செவ்வாய்க்கிழமை (14.07.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




- புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.
- மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.
- காணிப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

# தமிழ் பேசும் அரசியல் கட்சிகள்
# இணைந்து செயற்பட இணக்கம்



ஆறு தமிழ் பேசும் அரசியல் கட்சிகள் பொதுத் தளத்தில் இணைந்து செயற்பட இணக்கம் வெளியிட்டதோடு மூன்று முக்கிய விடயங்களை வலியுறுத்தியுள்ளன.

(02 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் வயதானபெண் காலமானார்



15ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் வீதி விபத்து
### இளைஞன் உயிரிழப்பு

(மன்னார்)

யாழ்ப்பாணம் - மன்னார் பிரதான வீதியின் பள்ளிக்குடா சந்தியில் இடம் பெற்ற விபத்தில் இளைஞர்

15ஆம் பக்கம் பார்க்க

## நீதியின் ஓலம் – 2
## தமிழினப் படுகொலைக்கு நீதி கோரி யாழில் பாரிய போராட்டத்துக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழினப்படுகொலைக்கு சர்வதேச நீதி கோரும் நீதியின் ஓலம் 2 எனும் போராட்டத்தின் கவனயீர்ப்புப் போராட்டம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதிவரை முன்னெடுக்கப் படவுள்ளதாக தாயகச் செயலணி அறிவித்துள்ளது.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே தாயகச் செயலணியினர் இவ்வாறு தெரிவித்தனர்.

16ஆம் பக்கம் பார்க்க

## விவசாயிகளுக்கு விரைவில் புதிய வங்கி

(கொழும்பு)

விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அதிக வட்டிக்கு கடன் பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் புதிய வங்கி ஒன்றை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர்வழங்கல் பிரதி அமைச்சர்

16ஆம் பக்கம் பார்க்க

## பலாலி பொலிஸாருக்கு எதிராக
## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பலாலி போராட்டக் களத்தில் கொட்டகை அமைப்பதற்கு அனுமதி தருமாறு பொலிஸாருக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில், நேற்று (13) முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இராணுவ வசமுள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி பலாலி மக்கள் தொடர்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்போராட்டம் நடைபெறும்

04ஆம் பக்கம் பார்க்க

## பாதுகாப்பு பிரதியமைச்சரின் பொய் அம்பலம்
## யாழில் இராணுவம் மரக்கறிகள் விற்பனை செய்வது நிரூபணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக இராணுவத்தினரால் பிரகடனப்படுத்தப் பட்டுள்ள தனியார் காணிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் இராணுவத்தினர் மரக்கறிகளை யாழ்ப்பாணத்தில் சந்தைப்படுத்தி வருகின்றமை

04ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு, கிழக்கில் முழுமையடையாத
## வீடமைப்புத் திட்டங்கள் குறித்து கணக்கெடுப்பு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முழுமையடையாமல் கைவிடப்பட்டுள்ள அரசாங்க வீடமைப்புத் திட்டங்கள் குறித்து அரசாங்கம் புதிய கணக்கெடுப்பொன்றை ஆரம்பித்துள்ளது.

கடந்தகால அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களின் கீழ் சுமார் ஆறாயிரம் வீடுகளின் நிர்மாணப் பணிகள்

15ஆம் பக்கம் பார்க்க

## நாட்டில் எச்.ஐ.வி தொற்றாளர்கள் அதிகரிப்பு!

(கொழும்பு)

நாட்டில் எச்.ஐ.வி வைரஸ் தொற்றுக்குள்ளான நோயாளர்களின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்து வருவதாகப் பாலியல் நோய்கள் தொடர்பான சமூக விசேட

15ஆம் பக்கம் பார்க்க

## "ஐஸ்" வைத்திருந்தவருக்கு ஆயுள் தண்டனை



### மன்னார் மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(மன்னார்)

5 கிராமுக்கும் அதிகமான 'ஐஸ்' போதைப்பொருளைத் தன்வசம் வைத்திருந்து, விற்பனை செய்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த நபர் ஒருவருக்கு மன்னார் மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு மார்ச்

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவற[illegible]க்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தமிழ் பேசும்...

நேற்றுத் திங்கட்கிழமை கொழும்பு தனியார் விடுதியில் சந்தித்த தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தமது சமூகங்கள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடவும் கருத்துக்களை பரிமாறிக்கொள்ளவும் இணக்கப்பாட்டை உருவாக்கவும் பொதுவான தளமொன்றை உருவாக்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் தமது கொள்கை மற்றும் அரசியல் நிலைப்பாடுகளை தனித்தனியாக பேணுவதற்கும் முன்வைப்பதற்கும் சுதந்திரம் இருப்பதை ஏற்றுக்கொண்ட பிரதிநிதிகள், பொதுவான நலன்கள் காணப்படும் விடயங்களை அடையாளம் கண்டு, சாத்தியமான சந்தர்ப்பங்களில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான ஒரு பொறிமுறையாக இந்தத் தளம் அமையும் எனத் தெரிவித்தனர்.

இதன்போது மூன்று முக்கிய விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டது.

**புதிய அரசியலமைப்பு**

அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்துவதாக வழங்கிய உறுதிமொழியை பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

அந்த உறுதிமொழியை நிறைவேற்றுமாறு அரசாங்கத்திடம் ஒருமித்த கோரிக்கையொன்றை முன்வைக்க தீர்மானிக்கப்பட்டதுடன், புதிய அரசியலமைப்பு நீதியும் சமத்துவமும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வும் உறுதி செய்யப்படும் வகையில் அதிகபட்ச அதிகாரப் பகிர்வை உள்ளடக்கியதாக அமைய வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

**மாகாண சபைத் தேர்தல்கள்**

மாகாண சபைத் தேர்தல்கள் ஒரு வருட காலத்திற்குள் நடத்தப்படும் என அரசாங்கம் தெரிவித்திருந்த போதிலும், தொடர்ச்சியாக இடம்பெறும் தாமதங்கள் குறித்து பிரதிநிதிகள் கவலை வெளியிட்டனர்.

மேலும், ஜனநாயக பங்கேற்பையும் பிராந்திய பிரதிநிதித்துவத்தையும் உறுதி செய்வதற்காக மாகாண சபைத் தேர்தல்களை மேலும் தாமதமின்றி நடத்துமாறு ஒருமித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

**அனைத்து சமூகங்களையும் பாதிக்கும் காணிப் பிரச்சினைகள்**

நாட்டின் மூன்று சமூகங்களையும் பாதிக்கும் தீவிரமான காணி தொடர்பான பிரச்சினைகள் தொடர்ந்தும் காணப்படுவதாகப் பிரதிநிதிகள் ஏற்றுக்கொண்டனர்.

இந்த நீண்டகால பிரச்சினைகளுக்கு பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் அர்த்தமுள்ள கலந்துரையாடல்களை முன்னெடுத்து, நியாயமான மற்றும் நிலையான தீர்வுகளை வழங்க வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

இந்தப் பொதுத் தளத்தின் ஊடாக தொடர்ச்சியான உரையாடல்களை முன்னெடுப்பதற்கான உறுதிப்பாட்டை பிரதிநிதிகள் மீண்டும் தெரிவித்ததுடன், இந்த விடயங்களில் பொதுவான அணுகுமுறையொன்றை உருவாக்குவது நல்லிணக்கம், ஜனநாயக ஆட்சி மற்றும் அனைத்து சமூகங்களினதும் உரிமைகளை பாதுகாப்பதற்கு பங்களிக்கும் என நம்பிக்கை வெளியிட்டனர்.

இதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகியவற்றின் தலைவர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர். (ம-7)

## பெயர் மாற்றம்

இல.236, கோணாவில், கிளிநொச்சியில் வசிக்கும் ராஜி சீதா எனும் பெயரை 13.07.2026 முதல் ஆறுமுகம் சீதா எனப் பெயர் மாற்றம் செய்கின்றேன். எனவே இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

(C-6041) உண்மையுள்ள ஆ.சீதா

## Car For Rent

Altro கார் வாடகைக்கு

(2514)

**077 332 2433**

## சேவல் விற்பனைக்கு

விறாத்து சேவல்கள்
பெரிய சேவல்கள்
(1 kg 1600/=
1½மாத சேவல் குஞ்சுகள்
(ஒன்று 650/=), ஒருநாள்
ஊர்க்கோழிக்குஞ்சு 170/=
விற்பனைக்கு



**076 023 3301**

(2514) சுழிபுரம்

## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள மாட்டுப்பண்ணை ஒன்றிற்கு பண்ணை வேலையாட்கள் தேவை.

- அனுபவம் விரும்பத்தக்கது.
- கால்நடைகளை பராமரிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- தங்குமிட வசதி வழங்கப்படும்.


(2516)

தொடர்புகளுக்கு:

**076 287 8655** வட்சப் மட்டும்

## மரண அறிவித்தல்

பிரம்மன் மகிழ்வில்
02 - 12 - 1972



உருத்திரன் அழைப்பில்
12 - 07 - 2026

## சாந்தலிங்கம் மதனரூபன்

கந்தரோடை மேற்கு, தம்மனையைப் பிறப்பிடமாகவும் தற்போது கந்தையா உபாத்தியார் வீதி, கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தலிங்கம் மதனரூபன் அவர்கள் நேற்று (12.07.2026) காலமானார்.

அன்னார் சாந்தலிங்கம் - அன்னலட்சுமி தம்பதிகளின் மூத்த மகனும் புனிதவதியின் அன்பு பெறாமகனும் சுப்பிரமணியம் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சுமதியின் பாசமிகு கணவனும் கோபிசாந் (கோபி - லண்டன்), மதுரிகா (மாணவி - யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகிவரனின் (பிரான்ஸ்) அன்புச் சகோதரனும் சுதாகரன் (லண்டன்), சுகிர்தா (இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும் மயூரன், ரிஷாலினி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கந்தரோடையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (14.07.2026) செவ்வாய்க்கிழமை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கந்தரோடை,
சுன்னாகம்.

(C-6042)

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு
16 - 09 - 1937



இறப்பு
11 - 07 - 2026

### திருமதி மரியாம்பிள்ளை வரவணிக்கம் (சித்தா)

புதுக்குடியிருப்பு 8ம் வட்டாரத்தை சேர்ந்த மரியாம்பிள்ளை வரவணிக்கம் (சித்தா) கடந்த 11.07.2026 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மத்தியாஸ் - செபமாலை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, பிலிப்பு, அலோஸ், அருட்சகோதரி மேரி மெற்றில்டா (செபமாலைதாசர் சபை), மரியகுமாரத்தி, புஸ்பஸ்மா மற்றும் சின்னப்பு (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலம் சென்றவர்களான பொனிபஸ் புவிராஜன், அல்போன்ஸ் லிகோரி மற்றும் ஆரோக்கியகுணதாஸ் (நோர்வே), யாழ்.மறைமாவட்டத்தைச் சேர்ந்தவரும் தற்போதைய கூழாமுறிப்பு பங்குத் தந்தையுமான அருட்பணி ம.கான்ஸ் போவர் அடிகளார் ஆகியோரின் அன்புத் தாயாரும் றஞ்சினி (நோர்வே), ஜஸ்மின் ஆகியோரின் அன்பு மாமியாரும் போல் றஜீவன் (நோர்வே), ஜனனி (நோர்வே), விஜயகுமார் (நோர்வே), திவானி (நோர்வே), தசவதனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லிறோஸ் (நோர்வே), றாஜன் (நோர்வே). யய்சன் (நோர்வே), ஜக்சன் (நோர்வே), ஜசிக்கா (நோர்வே), ஜக்சீஸ் (நோர்வே), லிகோரி, சந்தோஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் எதிர்வரும் 15.07.2026 புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு அவ் ஆலய சேமக்காலையில் அன்னாரின் உடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அறிமுகமானவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: அருட்பணி ம.கான்ஸ்போவர் (மகன்)
ஆரோக்கிய குணதாஸ் (மகன்)
077 612 8755

(2515)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஊழல் மோசடிகளை நியாயப்படுத்தாதீர்கள்



## எதிர்க்கட்சிகளின் அரசியல் பழிவாங்கல் குற்றச்சாட்டை முறியடித்த அமைச்சர்

(கொழும்பு)

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு, அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை அடியோடு மறுத்துள்ள அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படுவது அரசியல் பழிவாங்கல் அல்ல, மாறாக சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டும் பணிகளே என்று தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

"கடந்த காலங்களில் இடம்பெற்ற பாரிய ஊழல், மோசடிகள் தொடர்பில் மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம், சுயாதீன விசாரணை நிறுவனங்களின் ஊடாகவே சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் எவ்வித அரசியல் உள்நோக்கமோ அல்லது பழிவாங்கும் நோக்கோ கிடையாது.

அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்திச் சட்டத்திலிருந்து தப்பிக்கும் காலம் முடிவுக்கு வந்துவிட்டது. குற்றங்கள் புரிந்தவர்கள் எவராக இருந்தாலும், அவர்கள் சட்டத்தின் முன் பதில் கூற வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

ஊழல், மோசடி தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக் குழுக்கள், கடந்த காலங்களைப் போலன்றி மிகவும் வெளிப்படையாகவும் சுயாதீனமாகவும் செயற்படுகின்றன. இதில் எந்தத் தரப்புக்கும் சார்பாகச் செயற்படும் தேவை அரசுக்கு இல்லை.

தங்கள் மீதான சட்ட நடவடிக்கைகளைத் தற்காத்துக் கொள்ள எதிர்க்கட்சிகள் அரசின் மீது "அரசியல் பழிவாங்கல்" என்ற முத்திரையை குத்த முயற்சிக்கின்றன. பேச்சு சுதந்திரம் என்ற பெயரில் ஊழல்களை நியாயப்படுத்த எவருக்கும் உரிமையில்லை. அரசு மக்களின் பணத்தைப் பாதுகாப்பதிலும், ஜனநாயக விழுமியங்களைக் காப்பதிலும் உறுதியாக உள்ளது." எனத் தெரிவித்தார். (நி)

# அரச துறையில் ஓய்வுபெறும் வயதெல்லை தொடர்பில் அரசாங்கம் பரிசீலனை

(கொழும்பு)

இலங்கையின் அரசதுறையின் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் ஓய்வுபெறும் வயதை மாற்றுவது தொடர்பில் தற்போது கோரிக்கைகள் கிடைத்து வருவதாக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் பரிசீலித்து வருவதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

மீரிகம வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், ஏற்கனவே பல்வேறுதரப்பு தொழில் வல்லுநர்களிடமிருந்தும் கோரிக்கைகள் கிடைத்துள்ளன.

மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர் நீதிமன்றம், மேல் நீதிமன்றத்தில் மாத்திரமன்றி சுகாதார சேவையில் உள்ள சில தொழில் வல்லுநர்களிடமிருந்தும் கோரிக்கைகள் வந்துள்ளன. சிறைச்சாலைகள் திணைக்களத்திலிருந்தும் கோரிக்கைகள் உள்ளன.

ஏனைய சில தொழில் வல்லுநர்கள் தங்களால் மேலும் சிறிது காலம் பணியாற்ற முடியும் எனத் தெரிவித்து, இந்த ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பதற்கான யோசனையொன்றை முன்வைத்துள்ளனர்.

சிலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாம். ஆனால் ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் அந்தக் கோரிக்கைகளை நாம் பரிசீலித்து வருகிறோம்" என அவர் தெரிவித்தார். (நி)

# ஹார்முஸ் நீரிணை நெருக்கடி அதிகரிக்கும் எண்ணெய் விலை

(கொழும்பு)

ஹார்முஸ் நீரிணையில் வர்த்தகக் கப்பல்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் அதனைத் தொடர்ந்து அமெரிக்கா - ஈரான் இடையே மீண்டும் தீவிரமடைந்துள்ள மோதல்களால், சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை மீண்டும் வேகமாக அதிகரித்துள்ளது.

தற்போது, ஒரு பீப்பாய் பிரெண்ட் ரக மசகு எண்ணெயின் விலை 79 அமெரிக்க டொலருக்கும் அதிகமாகவும், ஒரு பீப்பாய் WTI ரக எண்ணெயின் விலை 74 அமெரிக்க டொலராகவும் அதிகரித்துள்ளது.

இந்த இரண்டு முக்கிய எண்ணெய் விலைகளும் கடந்த வெள்ளிக்கிழமை விலைகளுடன் ஒப்பிடும் போது அதிகரிப்பை பதிவு செய்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை ஒரு பீப்பாய் பிரெண்ட் ரக மசகு எண்ணெயின் விலை 76 அமெரிக்க டொலராகவும், ஒரு பீப்பாய் WTI ரக எண்ணெயின் விலை 72 அமெரிக்க டொலராகவும் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# போலி இணையவழி போக்குவரத்து அபராதம்

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

சந்தேகத்திற்கிடமான இணைய இணைப்புகள் மூலம் போக்குவரத்து அபராதங்களை ஒன்லைனில் செலுத்துமாறு அறிவுறுத்தும் மோசடி குறுஞ்செய்திகள் மற்றும் வாட்ஸ்அப் செய்திகள் குறித்து இலங்கை பொலிஸார் வாகன சாரதிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.


மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திலிருந்து வந்ததாகத் தோன்றும் அந்தச் செய்திகள், போக்குவரத்து விதிமீறல் குற்றச்சாட்டுகளுக்கான அபராதத் தொகையை ஒரு வாரத்திற்குள் செலுத்த வேண்டும் என்று கூறுகின்றன.

இருப்பினும், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அத்தகைய அறிவிப்புகள் எதையும் வெளியிடவில்லை என்றும், அந்தச் செய்திகள் முற்றிலும் போலியானவை என்றும் போக்குவரத்து ஒழுங்குமுறை மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் டபிள்யூ. பி. ஜே. சேனதீர பொது மக்களை வலியுறுத்தியுள்ளார்.

எனவே, அந்த இணைப்புகளைத் திறக்கவோ, தனிப்பட்ட அல்லது வங்கி விவரங்களை வழங்கவோ அல்லது அந்தச் செய்திகளுக்குப் பதிலளிக்கவோ வேண்டாம் என்றும் பொதுமக்களை பிரதிப் பொலிஸ்மா அதிபர் கேட்டுக்கொண்டார்.

பாதிக்கப்பட்ட எவரும் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் அறிவுறுத்தினார். (நி)

# பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி



(கொழும்பு)

கடந்த 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 112,000 ஆல் குறைவடைந்துள்ளது என சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல் ராஜ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவர் முதியோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது ஆபத்தான, பாதுகாப்பற்ற குழந்தை பிறப்பு வீதம் அதிகரித்துள்ளது. குறிப்பாக திருமணமாகாத பாடசாலை மாணவிகள் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இவ்வாறு பிறக்கும் குழந்தைகளுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பிரத்தியேக வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## விளையாட்டுச் செய்திகள்

# தலைவர் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப்போட்டி
# வாகை சூடியது கொலின்ஸ் அணி

**பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழகத்தினால் நடத்தப்பட்ட தலைவர் கிண்ண உதைபந்தாட்ட தொடரின் இறுதிப்போட்டியில் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை வீழ்த்தி கொலின்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றுள்ளது.**




வடமராட்சி சிரேஸ்ட உதைபந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் அமரர் க.சொக்கன் ஞாபகார்த்தமாக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய தலைவர் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி கடந்த ஜூன் 10 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற தலைவர் கிண்ணத்திற்கான இறுதிப்போட்டியில் கொலின்ஸ் - ஐக்கிய விளையாட்டு கழக அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

முதல் பாதி ஆட்டத்தில் கொலின்ஸ் அணி ஒரு கோல் அடித்து முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதி ஆட்டத்தின் போதும் கொலின்ஸ் அணி அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி மேலும் ஒரு கோலினை அடித்து வெற்றியை உறுதி செய்து கொண்டது.

பதில் கோல்களை போடுவதற்கு ஐக்கிய விளையாட்டுக் கழக வீரர்கள் மீக தீவிரம் காட்டிய போதிலும் கொலின்ஸ் இலக்கு காப்பாளரின் அற்புதமான ஆட்டத்தினால் அத்தனை முயற்சிகளும் முறியடிக்கப்பட்டது. இறுதியில் 2 : 0 என்ற கோல் கணக்கில் ஐக்கிய விளையாட்டு கழக அணியை வீழ்த்தி கொலின்ஸ் அணி தலைவர் கிண்ணத்தை வென்றது.

தொடரின் சிறந்த இலக்கு காப்பாளருக்கான விருது கொலின்ஸ் அணியின் இலக்கு காப்பாளருக்கும், சிறந்த பின்கள வீரருக்கான விருது ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் கிட்டுவிற்கும், தொடர் நாயகன் விருது கொலின்ஸ் அணியின் அகிலதீபனுக்கும் வழங்கப்பட்டது.

அத்துடன் தலைவர் வெற்றிக் கிண்ணத்தை வென்ற கொலின்ஸ் அணிக்கு சம்பியன் கிண்ணத்துடன் 30 ஆயிரம் ரூபாவும், இரண்டாமிடம் பெற்ற ஐக்கிய விளையாட்டு கழக அணிக்கு வெற்றிக்கிண்ணமும் 20 ஆயிரம் ரூபாவும், மூன்றாமிடம் பெற்ற வல்வை அணிக்கு வெற்றிக்கிண்ணமும் பத்தாயிரம் ரூபாவும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3-60)

# தேசிய மட்ட கபடிப் போட்டி
# யாழ்.மகளிர் அணி சம்பியன்



தேசிய மட்ட பெண்களுக்கான கபடிப் போட்டியில் யாழ்.மாவட்ட இளைஞர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

மாவட்ட இளைஞர் அணிகளுக்கு இடையிலான 36 ஆவது தேசிய மட்ட கபடிப் போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாத்தறை பொது விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் யாழ் மாவட்ட இளைஞர் அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட இளைஞர் அணி மோதியது.

இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர். இதனால் ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை இரு அணிகளும் பலப் பரீட்சை நடத்தினர்.

இருப்பினும் ஆட்ட நேர முடிவில் யாழ்.மாவட்ட இளைஞர் அணி 28:25 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (3-90)

## யாழில் இராணு...

நிரூபணமாகியுள்ளது.

கடந்த வாரம் பாராளுமன்றில் உரையாற்றிய பாதுகாப்பு பிரதி அமைச்சர் வலி.வடக்கில் இராணுவத்தினர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவது, தமது சுய தேவைக்கு எனவும் தெரிவித்திருந்தார்.

பிரதி அமைச்சரின் இக்கூற்றினை முற்றாக நிராகரித்த வலி.வடக்கு மக்கள், தாம் தமது சொந்த இடங்களில் இருந்து விரட்டப்பட்டு 36 வருடங்கள் கடந்த நிலையிலும், எமது காணிகளை பாதுகாப்புக் காரணம் எனக் கூறி அடாத்தாக கையகப்படுத்தி அவற்றில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

நாம் எமது காணிகளை இழந்து வாழ்வாதாரங்களை இழந்து நிர்க்கதியாக நிற்கும்போது, எமது காணிகளில் விவசாயம் செய்யும் இராணுவத்தினர் விவசாய உற்பத்திப் பொருட்களை பெருமளவில் விற்று இலாபம் ஈட்டுகின்றனர்.

இராணுவத்தினரின் இத்தகைய செயற்பாடானது, உள்ளூர் விவசாயிகளின் வாழ்வாதாரங்களையும் பாதிக்கின்றது.

வலி.வடக்கில் இராணுவத்தினரின் விவசாயப் பண்ணைகளில் விளையும், விவசாயப் பொருட்களை பலாலி வீதி உரும்பிராய் பகுதியில் உள்ள தனியார் பல்பொருள் அங்காடியின் மரக்கறி கொள்வனவு நிலையத்தில் இராணுவத்தினர் பெருமளவில் விற்பனை செய்து வருகின்றனர்.

இதற்கான ஆதாரமாக தம்மிடம் காணொளி பதிவுகள் உள்ளதாக கூறி அவற்றை ஊடகங்களுக்கு அனுப்பியுள்ளனர். (ம-7)

## இலங்கை...

இடத்தில் அமர்ந்து போராட்டம் நடத்துவதற்காக அந்தப் பகுதியில் கொட்டகை அமைக்க பலாலி பொலிஸாரிடம் அனுமதி கோரியிருந்தனர்.

பலாலிப் பொலிஸார் அனுமதிக்காத நிலையில், கடுமையான வெயிலில் இருந்து தாம் போராட்டத்தை முன்னெடுப்பதனால், பாரிய சிரமத்தை எதிர்கொள்வதாகவும், இப்போராட்டத்தில் வயோதிபர்கள், முதியவர்கள், சிறுவர்கள் என பல தரப்பினர் போராட்டத்தில் கலந்து கொள்வதனால் வெயிலில் பாரிய களைப்பு, சோர்வு போன்ற உபாதைகளை எதிர்கொள்ள நேரிடுவதாக சுட்டிக்காட்டி, போராட்டம் நடத்தும் இடத்தில் கொட்டகை அமைக்க அனுமதி பெற்றுத் தருமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

உரிய தரப்பினருடன் கலந்துரையாடி தீர்வைப் பெற்றுத்தருவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விமல் வீரவன்சவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

கடந்த 2016 ஆம் ஆண்டு கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்திற்கு முன்பாக வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு, பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச உள்ளிட்ட 6 சந்தேகநபர்களுக்கு எதிரான வழக்கின் மேலதிக விசாரணைகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி வரை ஒத்திவைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு பிரதம நீதவான் அசங்க எஸ்.போதரகம முன்னிலையில் நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.



இதன்போது, வழக்கின் முக்கிய சந்தேகநபர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை.

அவர் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவரது சட்டத்தரணி நீதிமன்றத்திற்கு அறிவித்ததுடன், அது தொடர்பான மருத்துவ அறிக்கையையும் சமர்ப்பித்துள்ளார்.

முன்வைக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்த பிரதம நீதவான், வழக்கின் விசாரணைகளை எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைக்க உத்தரவிட்டார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு பிப்ரெவரி 6 ஆம் திகதி, அப்போதைய ஐ.நா மனித உரிமைகள் உயர் ஆணையாளர் இளவரசர் சைத் ராத் அல் ஹுசைன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

அந்த விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகத்திற்கு முன்பாக தும்முல்ல மற்றும் அதனைச் சுற்றியுள்ள வீதிகளை மறித்துப் போராட்டம் நடத்தியதன் மூலம் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலும் இடையூறும் ஏற்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த வழக்கினைக் கறுவாத்தோட்டம் பொலிஸார் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஒரு இலட்சம் வாகன இலக்கத் தகடுகள் தேக்கம்

(கொழும்பு)

அச்சிடும் பணிகள் இடைநிறுத்தப்படுவதற்கு முன்பு அச்சிடப்பட்ட சுமார் 1 இலட்சம் வாகன இலக்கத் தகடுகளில், இருபது தகடுகளை மட்டுமே வாகன உரிமையாளர்கள் பெற்றுக் கொண்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அச்சிடப்பட்ட சுமார் 1 இலட்சம் வாகன இலக்கத் தகடுகள், உரிமையாளர்களால் பெற்றுக் கொள்ளப்படாததால், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் தேங்கிக் கிடந்தன.

உரிமை மாற்றத்தின்போது மாகாணங்களை மாற்றிக்கொண்ட வாகனங்களிடமிருந்து பெறப்பட்ட பெருமளவிலான வாகனப் பதிவுத் தகடுகள், அக்காலகட்டத்தில் வாகன இறக்குமதி நடைபெறாத நிலையிலும் இவ்வாறு குவிந்திருந்ததாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜூன் 30 ஆம் திகதிக்குள் தேங்கிக்கிடக்கும் இந்த வாகன இலக்கத் தகடுகளை பெற்றுக்கொள்ளாவிட்டால் அவை பழைய இரும்புக்கு அனுப்பப்படும் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் மின்னணு மற்றும் அச்சு ஊடகங்கள் வாயிலாக இரண்டு மாதங்களுக்கு முன்பே அறிவித்திருந்தது.

எனினும், அக்குறிப்பிட்ட காலத்திற்குள் 20 இற்கும் குறைவான இலக்கத் தகடுகளே உரிமையாளர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

ஒரு புதிய நிறுவனம் தற்போது வாகன இலக்கத் தகடுகளை அச்சிடும் பணிகளைத் தொடங்கியுள்ள நிலையில், உரிமையாளர்களால் பெற்றுக் கொள்ளப்படாத அனைத்து இலக்கத் தகடுகளையும் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (நி)

# பிள்ளையானின் விளக்கமறியல் நீடிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் ஐந்து கொலைச் சம்பவங்கள் தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள, "பிள்ளையான்" என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை, எதிர்வரும் 24 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, குறித்த உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கு தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (நி)


# Invitation for Bids (IFB)
## Zonal Education Office-Vadamaradchy

1. **The Chairman**, Zonal Education office-Vadamaradchy, on behalf of the Zonal Director of Education, Zonal Education office-Vadamaradchy, 1 mile post, Pointpedro, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
**"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"**
4. Qualification's requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents.
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2026.07.14 To 2026.07.28** during **09:00 hrs and 15:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Zonal Director of Education, Zonal Education office- Vadamaradchy (T.P:021-226 0161) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman**, Zonal Education office-Vadamaradchy **on or before 15.00 a.m as stated in table below**. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. The pre-bid meeting will be held on 21.07.2026 at 10.30 Hrs at the Director's Education, Zonal Education office-Vadamaradchy 1st Mile Post, Pointpedro. The address (es) referred to above is (are): Chairman, Regional Procurement Committee. Zonal Education office- Vadamaradchy, 1st Mile Post, Point Pedro.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 2026.07.14 To 2026.07.28 |
| Pre-Bid Conference | At 10.30 A.M on 2026.07.21 |
| Closing and Opening of Bids | At 15.00 P.M on 2026.07.28 |

| Bid No | Name of the Work | Estimated Civil Cost LKR In Mn Without VAT | Contract Period (Days) | Non Refundable Fee (Rs.) | CIDA Grade Required | Required Bid Security: Security -Amount (Rs.) | Required Bid Security: Bid Security Validity Period | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| NP/41/20/04/03/2026/CM/Works/04 | Minor Repair of Roof & tile works at J/Nelliady Central College | 0.932 Mn | 49 | 1000.00 | C9,C8&C7 (Buildings) | 10,000.00 | 14.10.2026 | 16.09.2026 |
| NP/41/20/04/03/2026/CM/Works/05 | Repair Works of Activity Room J/Nelliady Central College | 2.969 Mn | 49 | 2000.00 | C9,C8&C7 (Buildings) | 30,000.00 | 14.10.2026 | 16.09.2026 |

**Chairman,**
**Regional Procurement Committee,**
**Zonal Education Office-Vadamaradchy,**
**1st Mile Post, Pointpedro**

(C-6039)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்பு மிக்க இணுவில் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்றைய தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்: சிவசாந்தன்)



அகன்ற தமிழ் உலகம் இலங்கை அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற திருக்குறள் மாநாடு - 2026ஐ முன்னிட்டு நடத்தப்பட்ட திருக்குறள் வினா விடைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு கல்லடி ஈழத்து திருச்செந்தூர் ஆலய மண்டபத்தில் கடந்த புதன்கிழமை (08) கலாநிதி முருகு தயாநிதி தலைமையில் இடம்பெற்றது.

# பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் குறித்த விழிப்புணர்வு கலந்துரையாடல்

(நெளுக்குளம்)

பெண்களின் அரசியல் பங்களிப்பின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வு கலந்துரையாடல் ஒன்று அண்மையில் வவுனியா Sun Tec Campus வளாகத்தில் நடைபெற்றது.

சமூக முன்னேற்ற முன்முயற்சிக்கான நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் இளைஞர்கள் ஒன்றிணைக்கப்பட்டு, தற்போதைய அரசியல் சூழலில் பெண்களின் பங்களிப்பு, அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம், பெண்கள் அரசியலில் இருந்து விலகிச் செல்வதற்கான காரணங்கள், அரசியலில் செயற்படும் பெண்கள் எதிர்கொள்ளும் சமூகப் புறக்கணிப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளில் பெண்களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டன.

கலந்துரையாடலில் பங்கேற்ற இளைஞர்கள் அரசியலின் மீதான தங்களது ஆர்வத்தை வெளிப்படுத்தியதுடன், எதிர்காலத்தில் பெண்களின் அரசியல் பங்களிப்பை அதிகரிக்க இளைஞர்கள் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பது தொடர்பாகவும் தங்களது கருத்துக்களையும் பரிந்துரைகளையும் பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் SMIO நிறுவனத்தின் தலைவர் கணபதி பிரசாந்த், வவுனியா மாவட்ட இணைப்பாளர் சசிகுமார் டெயிசி மற்றும் நிறுவனத்தின் பணியாளர்கள் கலந்து கொண்டனர். (8-299)

# கருத்தரங்கு

(கரணவாய்)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் "முழு நாடும் ஒன்றாக செயற்றிட்டத்தின் கீழ் போதை மற்றும் குற்ற செயல்களை கட்டுப்படுத்துவது தொடர்பான கருத்தரங்கு புலோலி கிழக்கு கிராமத்தில் பொலிஸ் பாதுகாப்புக் குழு தலைவர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய குற்ற பிரிவு பொறுப்பதிகாரி விஜயரத்தின, பொலிஸ் உத்தியோகத்தர் லங்கா ஆகியோர் கலந்து கொண்டு போதை விழிப்புணர்வு, மற்றும் குற்ற செயல்கள் தடுப்பு தொடர்பான கருத்துரைகளை வழங்கினர்.

இதன்போது குற்றச் செயல்களைத் தடுப்பது, சமூகத்தில் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவது, போதைப் பொருள், திருட்டு, வன்முறை போன்ற பிரச்சினைகளைக் குறைப்பது போன்ற விடயங்களுக்காக ஊர் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-60)

# சீருடைகள் வழங்கி வைப்பு!

(கரணவாய்)

யாழ்ப்பாணம் தொண்டைமனாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தால் மாணவர்களுக்கான சீருடைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் திருகோணமலை - ஈச்சிலம்பற்று புன்னையடி ஸ்ரீ லம்போதரர் அறநெறிப் பாடசாலையில் உள்ள 128 மாணவர்களுக்கும், திருகோணமலை - ஈச்சிலம்பற்று கறுக்காமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலையில் உள்ள 40 மாணவர்களுக்கும், சீருடைகள் வழங்கப்பட்டன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அறநெறிப் பாடசாலை களில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில், சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார் (8-60)

# கரவெட்டியில் மருத்துவ முகாம்



(கரணவாய்)

யாழ்ப்பாணம் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளையின் அனுசரணையில் தொற்றா நோய்கள் தொடர்பான மருத்துவ முகாம் ஒன்று அண்மையில் கரவெட்டி கிழக்கு காட்டுப்புலம் சிவநேசன் ஞாபகார்த்த பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த மருத்துவ முகாமில் 41 பேருக்கு கண் பார்வை பாதிப்புக்களும், 3 பேருக்கு நீரிழிவு அதிகரிப்பும், ஒருவருக்கு உயர் இரத்த அழுத்தமும், 19 பேருக்கு பல் பிரச்சினையும் கண்டறியப்பட்டு மேலதிக வைத்திய ஆலோசனையும் வழங்கப்பட்டது. (8-60)



யா/ ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் மகாஜனனம் 2 இதழ் வெளியீடும் கடந்த 1 ஆம் திகதி புதன்கிழமை பாடசாலை முத்துலிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் பரமநாதன் கமலதாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன் கலந்து சிறப்பித்தார்.

# கலாசாலையில் ஆடிப்பிறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நடத்தும் ஆடிப்பிறப்பு விழா எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளி காலை 9 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி செல்[illegible] கலந்து கொள்வார். [illegible]

# கோணேஸ்வரா விளையாட்டுக்கழகத்திற்கு சீருடைகள் வழங்கி வைப்பு



(நெளுக்குளம்)

விசுவமடு மேற்கு தொட்டியடி கோணேஸ்வரா விளையாட்டுக்கழக இளையோர் அணிக்கான சீருடைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (12) வழங்கிவைக்கப்பட்டன.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் வே. கரிகாலனின் ஒழுங்கமைப்பில், அமரர் திருமதி மேரி சின்னமலர் மரியநாயகம்பிள்ளையின் பிறந்ததின நினைவாக, குறித்த சீருடைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி.பொருளாதார மத்திய நிலையத்தில்
## 34 வியாபாரிகளுக்கு கடைகள் கையளிப்பு



(கருமபுரம்)

கிளிநொச்சி விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் 34 வியாபாரிகளுக்கு கடைகள் வழங்கப்பட்டன.

குறித்த கடைகளை கூட்டுறவு பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க நேற்று வழங்கி வைத்தார்.

குறித்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரின் இணைப்பாளர் மருங்கன் மோகன் அரச உத்தியோகத்தர்கள், வியாபாரிகள் என பலரும் கலந்து கொண்டனர். (8-316-315)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ்
ஓம் சக்தி அருள்வாக்குப் பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார்
அவர்கள் யாழ்.வருகை, ஜாதகம், கைரேகை, எண் கணிதம்
மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில்
தொடங்க, திருமணத் தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில்
பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை,
குழந்தைப் பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில்.

(C-6037)

**074 196 4945, 076 682 7368**

**இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


# Kilinochchi District Secretariat
# INVITATION FOR BIDS (IFB)

## Amended of Advertisement for Rehabilitation of Road Works

Regarding the above subject, this is to inform you that the following details advertised by the District Secretariat Kilinochchi on 10.07.2026 have been Amended.

| No | Already published on 10.07.2026 | | | To be Amended at to the Document Details |
|---|---|---|---|---|
| I | Package No | Estimated civil Cost Rs Mn. (without VAT in Mn) | CIDA Grade & Specialty | CIDA Grade & Specialty |
| II | Package 1 | 64.20 | C5 or Above Highway | C5, C4, C3 - Highway |
| III | Package 2 | 48.20 | C6 or Above Highway | C6, C5, C4 - Highway |
| IV | Package 3 | 37.10 | C6 or Above Highway | C6, C5, C4 - Highway |
| V | Package 4 | 27.10 | C6 or Above Highway | C6, C5, C4 - Highway |

1. All any others Instruction of the bid will be same without any alternations.

Chairman,
Departmental Procurement Committee,
Kilinochchi District Secretariat,
Kilinochchi,T.P/ Fax:-021 228 5352, Web http://kilinochchi.dist.gov.lk

(C-6040)



தமிழகத்தில் பொன்னி பதிப்பகம் வெளியிட்டுள்ள பொ.ஐங்கரநேசனின் "வேர்முகங்கள்" நூல் வெளியீட்டு விழா கடந்த 8 ஆம் திகதி புதன்கிழமை சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக நூல் வெளியீட்டுக் கட்டட அரங்கில் இடம்பெற்றது.

பதிப்பாளர் வைகறை வாணனின் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் படைப்பாளி கவிதா பாரதி நூலை வெளியிட்டு வைக்க ஓவியர் டிராட்ஸ்கி மருது முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

# மரண அறிவித்தல்

மலர்வு
01 - 12 - 1948



உதிர்வு
11 - 07 - 2026

## பாலசிங்கம் நமசிவாயம்

சேமப்புல வீதி, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் நமசிவாயம் அவர்கள் கடந்த 11.07.2026 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - செல்வரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம் - பத்மாவதி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜெயகௌரியின் அன்புக் கணவரும் பரமநாதன்(கனடா), நகுலேஸ்வரி(கொழும்பு), சர்வேஸ்வரி(நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜெனார்த்தனன்(கணேசா கால் நடை தீவன விற்பனை நிலையம்), துஷ்யந்தினி(பிரான்ஸ்), கஜென்(நியூ செல்வம் ஸ்ரோஸ்), ஷாழினி(லண்டன்,) கஜீதன்(கனடா) ஆகியோ ரின் பாசமிகு தந்தையும் அஞ்சலி (கனடா), காலஞ்சென்றவர்களான நகுலேஸ்வரன், பூபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாலரூபினி(யா/கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலயம்), தர்ஷன் (பிரான்ஸ்), கஜனி, குகராஜ் (லண்டன்), நியூசிகா ஆகியோரின் அன்பு மாமனாரும் லக்ஷிகன், டிலக்ஷன்(பிரான்ஸ்), அனுஷ்மிகா (பிரான்ஸ்), ஆதவன்(லண்டன்), சிந்துஜா(லண்டன்), தீபிகா, கனிஷ்கா, கஷ்மினி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (14.07.2026) இன்று செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-6038)

தகவல்: குடும்பத்தினர்
சேமப்புல வீதி,
உரும்பிராய் தெற்கு,உரும்பிராய்.
ஜெனா - 077 615 4231
கஜென் - 077 930 9776

# அகவை அறுபது காணும் மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்



யா/கோப்பாய் மகா வித்தியாலயத்தில் 7 வருடங்கள் அர்ப்பணிப்புடன் கடமையாற்றி 14.07.2026 இன்று தனது 60 ஆவது வயதில் ஓய்வு பெறும் சிரேஷ்ட ஆரம்பக் கல்வி ஆசிரியை

## திருமதி. விமலாதேவி புவனேஸ்வரகுமார்
(SLTS-I)

### சேவை விபரம்

- யா/நெடுந்தீவு பாரதி வித்தியாலயம்
  1988.10.21 – 1993.02.25
- நு/யதன்சைட் அரசினர் ஆசிரியர் கலாசாலை
  1993.02.26 – 1994.12.31
- யா/நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலயம்
  1995.05.01 – 1997.01.16
- யா/நெடுந்தீவு பாரதி வித்தியாலயம்
  1997.01.17 – 2000.03.20
- யா/நெடுந்தீவு கல்விக் கோட்டம் (ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்)
  2000.03.21 – 2001.04.02
- யா/நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலயம்
  2001.04.03 – 2003.07.02
- யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்
  2003.07.03 – 2010.02.09
- யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்
  2010.06.14 – 2020.01.01
- யா/கோப்பாய் மகா வித்தியாலயம்
  2020.01.02 – 2026.07.13

Best Wishes

[8032]

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள்
யா/கோப்பாய் மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்லாந்து களியாட்ட விடுதியில் பயங்கர தீ விபத்து!

- 27 பேர் உயிரிழப்பு
- பலரது நிலைமை கவலைக்கிடம்



(பாங்கொக்)

**தாய்லாந்தின் பாங்கொக் நகரில் உள்ள களியாட்ட விடுதி ஒன்றில் நேற்று அதிகாலை ஏற்பட்ட பாரிய தீப்பரவலில் சிக்கி குறைந்தது 27 பேர் உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

சமீபத்திய ஆண்டுகளில் தாய்லாந்தில் நடைபெற்ற மிக மோசமான தீ விபத்துகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது.

சம்பவ இடத்தைப் பார்வையிட்ட தாய்லாந்து பிரதமர் அனுதின் சார்ன்விராகுல் தெரிவிக்கையில், "தீப்பரவல் ஏற்பட்ட போது விடுதி முழுவதும் புகை வேகமாகப் பரவியுள்ளது.

அங்கிருந்தவர்கள் தப்பிச் செல்ல முயற்சி செய்த போது, போதிய அவசரக் கால வெளியேறும் வழிகள் இல்லாததால் கழிவறைகளுக்கு அருகில் சிக்கிக் கொண்டனர்.

இதுவரை 27 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்" என்று தெரிவித்தார்.

இந்த சம்பவத்தில் 63 பேர் காயமடைந்துள்ளதாகவும், அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.


தீப்பரவலுக்கான காரணம் தெரியவராத நிலையில், அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். தாய்லாந்தில் இத்தகைய சம்பவம் நிகழ்வது இது முதல் முறையல்ல.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, பாங்கொக்கிற்குத் தெற்கே உள்ள ஒரு நகரத்தில் இருந்த மதுக்கூடம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 22 பேர் உயிரிழந்தனர்.

2009ஆம் ஆண்டில், தலைநகரில் உள்ள இரவு விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 66 பேர் உயிரிழந்தனர்.

இச்சம்பவங்களுக்குப் பின்னர் தீ மற்றும் மின்சாரப் பாதுகாப்புத் தரங்களை மேம்படுத்துவதாக அதிகாரிகள் உறுதியளித்த போதிலும், தாய்லாந்தில் அவை பெரும்பாலும் முறையாகச் செயற்படுத்தப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (3)

## கட்டாரின் முன்னாள் அமீர் மறைவு; நான்கு நாட்கள் தேசிய துக்கம் அனுஷ்டிப்பு



(டுபாய்)

கட்டார் நாட்டின் நவீன அரசை உருவாக்கியவரும், முன்னாள் அமீருமான ஷேக் ஹமாத் பின் கலீஃபா அல் தானியின் மறைவை முன்னிட்டு, நான்கு நாட்கள் தேசிய துக்க தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நான்கு நாள் தேசிய துக்க தினத்தை, கட்டார் நாட்டின் மிக உயர்ந்த அரசு நிறுவனமான 'அமீரி திவான்' அறிவித்துள்ளது.

ஷேக் ஹமாத் பின் கலீஃபா அல் தானி, 1995 முதல் 2013 வரை கட்டார் நாட்டின் அமீராகப் பணியாற்றினார்.

அவரது ஆட்சிக் காலத்தில், கட்டாரை உலகின் முன்னணி பொருளாதார, ராஜதந்திர மற்றும் ஊடக சக்திகளில் ஒன்றாக மாற்றுவதில் அவர் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தார்.

புகழ்பெற்ற 'அல் ஜசீரா' ஊடக வலையமைப்பை நிறுவியதற்கும், நாட்டின் இயற்கை எரிவாயுத் தொழிலை மேம்படுத்தி, கட்டாரை உலகின் பணக்கார நாடுகளில் ஒன்றாக மாற்றியதற்கும் அவர் பெருமைக்குரியவர்.

பிராந்திய மரபுகளிலிருந்து விலகி, அவர் 2013 இல் தனது மகனும் தற்போதைய அமீருமான ஷேக் தமீம் பின் ஹமத் அல் தானியிடம் தானாக முன்வந்து அதிகாரத்தை ஒப்படைத்தார்.

அத்துடன் பல உலகத் தலைவர்கள் அவரது மறைவுக்குத் தங்கள் வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவித்துள்ளனர். (3)

## 50ஆயிரம் தாக்குதல் ட்
## உக்ரைன் - ஜேர்மனி
## பிரமாண்ட இராணுவ

(பேர்லின்)

ரஷ்யாவுடனான போர் நான்கு ஆண்டுகளைக் கடந்து நீடித்து வரும் நிலையில், உக்ரைனுக்கு 50 ஆயிரம் தாக்குதல் ட்ரோன்களை வழங்குவதற்கு ஜேர்மனி நிதியுதவி அளித்து வருவதாக நம்பகமான வட்டாரங்கள் மூலம் தகவல் வெளியாகியுள்ளது.

மேற்கத்திய நாடு ஒன்று உக்ரைனுக்காக வழங்கும் மிகப்பெரிய ட்ரோன் கொள்முதல்களில் ஒன்றாக இது பார்க்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்தின் மதிப்பு சுமார் 90 மில்லியன் யூரோக்கள் (103 மில்லியன் டொலர்) ஆகும்.




இந்த ட்ரோன்களில் அமெரிக்காவின் "ஆட்டேரியன்" பாதுகாப்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் மென்பொருள் பொருத்தப்பட்டுள்ளது.

இது பறக்கும் இறுதி கட்டத்தில், நகரும் இலக்குகளைத் தானாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பழிவாங்கப்பட வேண்டிய தலைவர்களின் பட்டியலை வெளியிட்ட ஈரான்!

## சர்வதேச அரங்கில் பரபரப்பு



**(டெஹ்ரான்)**

**அலிகமேனியின் படுகொலைக்கு பழிவாங்கும் நடவடிக்கையாக ட்ரம்ப், நெதன்யாகு முதல் ஐரோப்பிய தலைவர்கள் வரை 13 பேரின் பட்டியலை ஈரான் வெளியிட்டுள்ளது.**



ஈரான் முன்னாள் உச்சத் தலைவர் அலி கமேனியின் படுகொலைக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகக் குறிவைக்கப்பட வேண்டிய தலைவர்களின் பட்டியலை ஈரானின் செய்தி நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ளது.

அதில் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த தலைவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் நடைபெற்ற போரில் அமெரிக்கா - இஸ்ரேல் இணைந்து நடத்திய தாக்குதல்களில் முதல் நாளே உச்சத் தலைவர் கமேனி கொல்லப்பட்டார்.

அவரது மகனும், தற்போதைய ஈரானின் உச்சத் தலைவருமான மொஜ்தபா கமேனி தந்தை கொல்லப்பட்டதற்குப் பழிவாங்குவதாக உறுதியளித்திருந்தார்.

கமேனியின் இறுதிச் சடங்கு முடிந்த பின்னர் மொஜ்தபா கமேனி வெளியிட்ட செய்தியில், "பழிவாங்குவது எங்கள் தேசத்தின் விருப்பம். அது கட்டாயமாக நிறைவேற்றப்படும்." என தெரிவித்திருந்தார்.

இதுபற்றி செய்தி வெளியிட்ட ஈரான் பத்திரிகை ஒன்று, "இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ள குற்றவாளிகள், அமைதியான முறையில் இறக்காமல், கல்லறைக்குச் செல்வார்கள்" எனத் தெரிவித்து மொஜ்தபா கமேனியின் அறிக்கையுடன் 13 வெளிநாட்டுத் தலைவர்களின் புகைப்படங்களையும் இணைத்து வெளியிட்டது.

அந்தச் செய்தியுடன் வெளியிட்ட விளக்கப்படத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் கீர் ஸ்டார்மர் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

அவர்களுடன் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, பாதுகாப்புத்துறை அமைச்சர் பீட் ஹெக்செத், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரோன், இத்தாலியப் பிரதமர் ஜார்ஜியா மெலோனி மற்றும் ஜேர்மன் சான்சிலர் பிரெட்ரிக் மெர்ஸ் ஆகியோரும் அந்த பட்டியலில் இடம்பெற்றிருந்தனர். (3)

# ...ட்ரோன்கள் ...ி இடையே ...வ ஒப்பந்தம்



துல்லியமாகக் கண்காணித்துத் தாக்கும் திறன் கொண்டது.

ஆட்டேரியன் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி லோரென்ஸ் மேயர் கூறுகையில், "இந்த ஒப்பந்தத்தின்படி சில ட்ரோன்கள் ஏற்கனவே உக்ரைன் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன.

மீதமுள்ளவை இந்த ஆண்டிற்குள் அனுப்பி வைக்கப்படும்." இந்த ஒப்பந்தத்தில் ஜேர்மனியின் பங்களிப்பை ஸ்கைஃபால் நிறுவனம் உறுதிப்படுத்திய போதிலும், பாதுகாப்பு காரணங்களுக்காக கூடுதல் விவரங்களை வெளியிட மறுத்துவிட்டது.

இது மட்டுமின்றி, பல்வேறு மேற்கத்திய நாடுகளின் நிதியுதவியுடன் இந்த ஆண்டு உக்ரைனுக்கு மொத்தம் 1 இலட்சம் ட்ரோன்களை வழங்க ஆட்டேரியன் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதில் அமெரிக்க பென்டகனின் 50 மில்லியன் டொலர் ஒப்பந்தமும் அடங்கும். மேலும், பிரித்தானியாவும் இந்த ஆண்டு உக்ரைனுக்கு 1 இலட்சத்து 50, ஆயிரம் ட்ரோன்களை வழங்கவுள்ளதாக கடந்த மாதம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

### ஐரோப்பாவில் வெப்ப அலை கொடூரம்

# ஒரே வாரத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு


கடந்த ஜூன் மாத இறுதியில் ஐரோப்பியக் கண்டத்தின் மேற்குப் பகுதியை நிலைகுலையச் செய்த கடுமையான வெப்ப அலையின் போது, ஏற்பட்ட மரணங்களை விட 10,000இற்கும் அதிகமான மரணங்கள் பதிவாகியுள்ளதாக அதிகாரப்பூர்வ புள்ளிவிபரங்கள் தெரிவிக் கின்றன.


ஐரோப்பிய நோய் தடுப்பு கட்டுப்பாட்டு மையம் மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றின் ஆதரவோடு இயங்கும் 'Euro MOMO' என்ற மரணக் கண்காணிப்பு அமைப்பு இந்த தரவுகளை வெளியிட்டுள்ளது.

வெப்ப அலையினால் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள், அதாவது 9,000இற்கும் அதிகமானோர் 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட முதியவர்கள் என அந்தத் தரவுகள் சுட்டிக் காட்டுகின்றன.

புவி வெப்பமயமாதல் காரணமாகவே இவ்வாறான வெப்ப அலைகள் அடிக்கடி மற்றும் அதிக தீவிரத்துடன் ஏற்படுவதாகவும், மனிதர்களின் தலையீடு இல்லாவிட்டால் ஜூன் மாத இறுதியில் நிலவிய இவ்வளவு கடுமையான வெப்ப அலை உருவாவது "சாத்தியமற்ற ஒன்று" என்றும் அவர்கள் விளக்கியுள்ளனர். பிரான்ஸ், ஸ்பெயின், பிரிட்டன் உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகளில் ஜூன் 22 முதல் 28 வரையிலான வாரத்தில் வெப்ப அலையின் தாக்கம் உச்சக் கட்டத்தை எட்டியிருந்தது.

தற்போது வெளியாகியுள்ள இந்தத் தரவுகள், 27 ஐரோப்பிய நாடுகளின் தேசிய மரணப் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் திரட்டப்பட்டவையாகும். (3)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கதிர்காம பயணப் பூசை நாளை

(யாழ்ப்பாணம்)

கதிர்காம கொடியேற்றத்தை முன்னிட்டு வேல் அனுப்பும் பயண பூசையானது நாளை புதன் கிழமை மாலை 5.15 மணியள வில் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடை பெறும். (8)

# அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 37ஆவது ஆண்டு நினைவுதினம்



(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவரான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 37 ஆவது ஆண்டு நினைவு தினம் யாழ்ப் பாணத்தில் நேற்றைய தினம் திங்கட்கிழமை அனுஷ்டிக் கப்பட்டது.

பண்ணாகம் கிராம அபி விருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வின்போது அவரது உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு சுடரேற்றி அஞ்சலி செலுத் தப்பட்டது.

இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், பண்ணாகம் கிராம மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (8-33)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1997- இந்து
நட்சத்திரம்: கேட்டை
உயரம்: 5"9"
தகைமை/தொழில்: Degree, Manager (கனடா)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தெ.இ: B/17081

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்:விசாகம்
12இல்செவ்
கி-பா-41 ½
உயரம்-5'9"
தகைமை/தொழில்- BA,Teacher
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/17083

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்- சுவாதி
கி-பா-21
உயரம்:5'5"
தகைமை/தொழில் -A/L,Teacher (Sinhala)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/17084

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம்:திருவாதிரை
கி-பா-8
உயரம்:5"
தகைமை/தொழில்-Bsc, Engineer
எதிர்பார்ப்பு: : பட்டதாரி
தெ.இ: B/17086

பிறப்பு: 1997- இந்து
நட்சத்திரம்:பூசம்
கி-ப- 32
உயரம்:6"
தகைமை/தொழில்: A/L, Restaurant (பிரான்ஸ்)
எதிர்பார்ப்பு: only பிரான்ஸ்
தெ.இ.: B/17088

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்:பரணி
கி.பா -39
உயரம்-5'4"
தகைமை/தொழில்: Bsc, Engineer
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/17054

பிறப்பு-2002-இந்து
நட்சத்திரம்: திருவோணம்
12இல்செவ்
உயரம்: 5"4"
தகைமை/தொழில்: A/L Cleark(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/17055

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
உயரம்-5"3"
தகைமை/தொழில்: BBA, Master, Audit Officer
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/17056

பிறப்பு-1992-இந்து
நட்சத்திரம்: மூலம்
11இல்சூரிசெவ்
உயரம்: 5"5"
தகைமை/தொழில்-BCOM,Law, MA
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ.: G/17057

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்:பூரம்
5இல்சூரிசெவ்
கி-ப-22 1/4
உயரம்: 5"4"
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/17060

தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 615

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## சகுனமும் சங்கடமும்!

ஒரு கடைக்குப் போனேன். ஐந்து ரூபா பணத்தை எடுத்துக் கொடுத்தேன். ஒரு தினசரி பத்திரிகையைக் கேட்டேன்.

அவர் உடனே அங்கே அடுக்கி வைத்திருந்த பத்திரிகையிலே ஒன்றை எடுத்து என் கையில் கொடுத்தார். வாங்கிக் கொண்டேன். மீதிப் பணத்தை எடுத்தார்.

அதையும் என் கையில் கொடுக்க வேண்டும் அல்லவா? கொடுக்கவில்லை! எதிரில் இருந்த பலகையில் வைத்து எடுக்கச் சொன்னார். எப்போதும் அவர் அப்படித்தான் செய்வார். நானும் எடுத்துக் கொண்டு வந்து விடுவேன்.

இவர் ஏன் இப்படி செய்கிறார் என்பது எனக்கு நிறைய நாளாக இருந்து வந்த ஒரு சந்தேகம், ஒரு நாள் அவரிடமே இதைக் கேட்டு விட்டேன்.

"ஏனப்பா.. நீங்கள் உங்கள் கடைக்கு வந்து பொருட்கள் வாங்குபவர்களுக்கு... நீங்கள் மீதி சில்லறையைக் கொடுக்கும் போது பலகையில் வைக்கிறீர்கள். கையில் கொடுப்பதில்லை ஏன் அப்படி?" என்று கேட்டேன்.

"காசைக் கையில் கொடுத்தால் நம்மிடம் இருக்கின்ற "லட்சுமி" போய் விடும் சேர்!" - என்றார். அதாவது பணம் செலவாகி விடும் என்று அர்த்தமாம். இன்னொரு நண்பர். அவர் ஒரு நாள் வழக்கத்துக்கு மாறாக மிகவும் சோகமாக உட்கார்ந்திருந்தார்.

"ஏனப்பா என்ன நடந்தது? ஏன் இப்படி கப்பல் கவிழ்ந்த மாதிரி உட்காந்திருக்கீர்கள்?" என்று கேட்டேன்.

"கப்பலே கவிழ்ந்திருந்தால் கூட நான் இப்படி கவலைப்பட மாட்டேன் சேர்.. வேற ஒன்று நடந்துவிட்டது.! என்றார்.

"என்ன?" என்று கேட்டேன்!. "என் உச்சந்தலையில் பல்லி ஒன்று விழுந்து விட்டது". "அதுக்காகவா இப்படி?" என்று ஆச்சரியப்பட்டேன்.

"ஆமாம்.. பல்லி உச்சந்தலையில் விழுந்தால் பலன் என்ன என்று பஞ்சாங்கத்தில் பார்த்தேன். மரணம் என்று போட்டிருக்கிறது!" என்று சொல்லிவிட்டு அவர் தொடர்ந்து கவலைப்பட ஆரம்பித்து விட்டார். இப்படியும் ஒருத்தர்.

என்னோடு வேலை பார்க்கும் ஒருத்தர் எப்படி தெரியுமா தினமும் வலது காலை வைத்துதான் அலுவலகத்துக்குள்ளே நுழைவார்.

என்றைக்காவது தவறுதலாக இடது காலை வைத்து உள்ளே வந்து விட்டார் என்றால் அன்றைக்கு முழுவதும் மனம் சங்கடப்படுவார். எந்த வேலையும் சரியாக நடக்காது!

கேரம் போர்ட் விளையாடுகிற ஒருத்தர் எப்ப பார்த்தாலும் ஸ்ட்ரைக்கரை கை தவறி கீழே விழுகிற மாதிரி போட்டுவிட்டு, பிறகு அதை எடுத்துக் கொண்டு விளையாட உட்காருவாராம். ஏன் என்றால் எப்பவோ ஒரு தரம் உண்மையாகவே கைதவறி கீழே விழுந்திருகிறது. அன்று பிரமாதமாக ஜெயித்து விட்டார். உடனே முடிவுக்கு வந்து விட்டார். பிறகு அதையே பழக்கமாக்கிக் கொண்டார்.

" பூனை குறுக்கே போனால் சகுனம் சரியில்லை என்று நினைப்பவர்கள் உண்டு. ஆனால் ஒருத்தர் எப்படி தெரியுமா? அவர் வெளியில் கிளம்பும் சமயம் பக்கத்து வீட்டு ரேடியோவில் "மியாவ் மியாவ் பூனைக்குட்டி" என்ற பாட்டு சத்தம் கேட்டால் கூட போதும்!. சகுனம் சரியில்லை என்று பிரயாணத்தை "கான்சல்" பண்ணிவிடுவார்.

இவ்வளவும் எதுக்குச் சொல்கிறேன் என்றால்.

அளவுக்கு மீறிய சகுன நம்பிக்கைகள் இருக்கிறது பாருங்கள். இதோடு பயமும் சேர்ந்து விட்டால், இது ஒருத்தருடைய மன நிலையைப் பாதித்து விடும் என்பது மனோதத்துவ நிபுணர்களின் கருத்து!. வாழ்க்கையையே தடுமாற வைத்து விடும்!.

பாதுகாப்பில்லாத உணர்வு... ஒருவிதமான "டிப்ரெஷன்" மனநிலை இதெல்லாம் இதற்குக் காரணமாக அமையலாம்! சிலபேர் காய்கறி நறுக்கக் கத்தியை கையிலே எடுத்தால் கூட நேரம் சரியாக இருக்கா என்று பார்த்து விட்டுத்தான் வேலையை ஆரம்பிப்பார்களாம்!

அறிவு தான் மனதுக்கு வாத்தியாராக இருக்க வேண்டும். அப்போது தான் வாழ்க்கை நிம்மதியாக இருக்கும். அறிவு மனது சொல்கிறபடியெல்லாம் கேட்க ஆரம்பித்து விட்டது என்றால் இடைஞ்சல்தான்.

ஒருத்தருக்கு ஏழாம் நம்பர்தான் இராசியான நம்பராம். ஏழாம் திகதிதான் எந்த காரியத்தையும் ஆரம்பிப்பார். ஏழு எழுத்து வருவது மாதிரி பேரை மாத்தி வைத்து விட்டார். ஏழு மணிக்குத்தான் தினமும் எழுந்து கொள்வார். ஏழாம் நம்பர் வீட்டில் தான் குடியிருக்கிறார். கல்யாணம் கூட ஏழாம் திகதிதான் செய்து கொண்டார்.

அவர் ஒரு நாள் குதிரைப் பந்தயத்துக்கு போனார். குதிரையின் பெயரையெல்லாம் பார்த்தார். ஒரு குதிரையின் பேர் ஏழு எழுத்தில் அமைந்திருந்தது. ஏழு தானே இவருக்கு அதிர்ஷ்ட நம்பர், அதனால் உடனே அதன் மேலேயே பணத்தைக் கட்டினார். பந்தயம் நடந்தது. "என்ன சேர் நடந்தது?" என்று கேட்டார்கள். "நான் பணம் கட்டிய அந்த என்னுடைய குதிரை ஏழாவதாக வந்து சேர்ந்தது சேர்" என்றார் சோகமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ் . மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள யாழ்நகர் 1 பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ARV) கீழ்வரும் இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறும் ஓர் நாய்க்கான உரிமம் கட்டணமான 100 ரூபாய் அறவிடப்படும் எனவும் யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (8)

| திகதி | நேரம் | தடுப்புமருந்து ஏற்றப்படும் நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| 15.07.2026 | மு.ப.09.00-மு.ப.11.00 | முத்தமிழ் வீதி பாலர் பாடசாலை |
| | மு.ப.11.00 - பி.ப.01.00 | மீனாட்சி அம்மன் கோவிலடி |
| | பி.ப. 02.30 - பிப 04.00 | நமசிவாயம் பாடசாலை முன்பாக |
| 16.07.2026 | மு.ப.09.00-மு.ப.11.00 | கூழாவடி வைரவர் கோவிலடி |
| | மு.ப.11.00 - பி.ப.01.00 | சிறாம்பியடி சனசமூக நிலையம் |
| | பி.ப. 02.30 - பிப 04.00 | பலாலி வீதி 2ஆம் ஒழுங்கை |
| 17.07.2026 | மு.ப.09.00-மு.ப.11.00 | யாழ் வீதி |
| | மு.ப.11.00 - பி.ப.01.00 | பெருமாள் கோவிலடி |
| | பி.ப. 02.30 - பிப 04.00 | கன்னாதிட்டி காளி கோவிலடி |
| 18.07.2026 | மு.ப.09.00-மு.ப.11.00 | நடமாடும் சேவை |
| 20.07.2026 | மு.ப.09.00-மு.ப.11.00 | சிவன் வடக்கு வீதி பாலர் பாடசாலை |
| | மு.ப.11.00 - பி.ப.01.00 | கீரிப்பிள்ளையார் கோவிலடி |
| | பி.ப. 02.30 - பிப 04.00 | மாவடி வீதி |
| 21.07.2026 | மு.ப.09.00-மு.ப.11.00 | பிரப்பங்குளம் வீதி |
| | மு.ப.11.00 - பி.ப.01.00 | B.A. தம்பி லேன் |
| | பி.ப. 02.30 - பிப 04.00 | கில்னர் வீதி |



யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தினால் யாழ். கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்திற்கு 3 தையல் இயந்திரங்கள் நேற்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டன.

இதற்கான 3 இலட்சம் ரூபா நிதியை பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமக்கு ஒதுக்கப்பட்ட பன் முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சாதனையாளர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யா/அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியின் "சாதனையாளர் கௌரவிப்பு விழா" இன்று செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு முருகேசு சதாசிவம் மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரி முதல்வர் கு.பாலமுருகன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கு.செந்தில்குமரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 300 | 400 | 400 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 200 | -- | -- |
| பச்சைமிளகாய் | 800 | 900 | 600 | 1200 | 900 | 1000 |
| தக்காளி | 350 | 550 | 500 | 400 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 250 | 200 | 200 | 200 | 200 |
| கோவா | 250 | 220 | 300 | 250 | 300 | 180 |
| கரட் | 400 | 360 | 400 | 400 | 380 | 350 |
| பூசணி | 200 | 220 | 200 | 200 | 150 | 180 |
| புடோல் | 120 | 200 | 200 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 150 | 140 | 250 | 200 | 110 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 300 | 400 | 350 | -- |
| பெரிய வெங்காயம் | 200 | 220 | 200 | 200 | -- | 200 |
| பாகற்காய் | 1200 | 1000 | 800 | 600 | 700 | 500 |
| வெண்டக்காய் | 200 | 150 | 200 | 400 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 400 | 300 | 400 | 350 | -- |
| பயற்றங்காய் | 400 | 300 | 500 | 300 | 350 | 350 |
| லீக்ஸ் | 400 | 300 | 300 | 300 | 300 | 300 |
| பீற்றூட் | 350 | 450 | 500 | 400 | 400 | 350 |
| கறிமிளகாய் | 400 | 500 | 400 | 600 | 400 | 550 |
| முருங்கைக்காய் | 450 | 500 | 400 | 400 | 300 | 450 |
| போஞ்சி | 600 | 450 | 500 | 500 | 400 | 400 |
| தம்புள்ள-கத்தரி | 350 | 250 | 200 | 350 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 150 | 80 | 30 | -- |
| தேசிக்காய் | 350 | 200 | 400 | 400 | 150 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 130 | 150 | 100-140 | 120 | -- |
| இராசவள்ளி | 400 | 400 | 400 | 350 | 350 | -- |
| வெங்காயப்பூ | 350 | 300 | 400 | 600 | 350 | -- |
| முள்ளங்கி | 200 | 180 | 200 | 200 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 60 | -- | -- |
| வல்லாரை | 80 | 70 | 100 | 100 | -- | -- |
| ஈரப்பலா | 200 | 200 | 100 | 250 | -- | -- |

## இராசிபலன்

14.07.2026
ஆனி 30, செவ்வாய்க்கிழமை
அமாவாசை பிற்பகல் 4.34 மணிவரை


புநர்பூசம் பின்னிரவு 2.29 மணிவரை
சுப நேரம் 10.30-12.00 மணிவரை
இராகு காலம் 3.00-4.30 மணிவரை

சந்திராஷ்டமம்
மூலம்,
அமாவாசை விரதம்

வளவன்





கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறைகாட்டுவீர்கள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.




பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாள்வது நல்லது, அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.




விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.




கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பது நல்லது, தேவைகள் பூர்த்தியாகும் நாள், செய் தொழில் உற்சாகம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.




வீட்டு உபயோகப் பொருட்களை வங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.




அன்னிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், உன்னத மானவாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.




செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.




தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், செய்தொழிலில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உறவினர் நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் சூழ்நிலை ஏற்படலாம்.




புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.




பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி அதிகரிக்கும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கௌரவமான நாள்.




மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், வாகன சுகமுண்டு, பேச்சில் கனிவு பிறக்கும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.

ஒரு புத்திசாலி வாய்ப்பை அதிர்ஷ்டமாக மாற்றுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

1087





இதிலிருந்து, ஆண்டவன் அவ்வளவு பாரபட்சமுள்ளவர் என்று முடிவு கட்டுதல் தவறாகும். சரித்திரத்தில் புகழ்பெற்ற மகான்களையும் வீரர்களையும் தவிர இன்னும் எத்தனையோ பேருக்கும் ஆண்டவன் சந்தர்ப்பங்களை அனுப்பிக் கொண்டுதானிருக்கிறார்.

ஆனால் அந்தச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்வது மனிதனுடைய சமயோசித அறிவையும், சரியான சமயத்தில் சரியான முடிவு செய்யும் ஆற்றலையும் பொறுத்தது. சந்தர்ப்பங்களைக் கை நழுவ விடுகிறவர் கோடானு கோடிப் பேர் பெயரும் புகழும் இல்லாமல் சாதாரண வாழ்க்கை வாழ்ந்து உலகை விட்டுச் செல்கிறார்கள். சந்தர்ப்பங்களைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்கிறவர்கள் சரித்திரத்தில் தங்கள் பெயரை நிலைநாட்டிவிட்டுச் செல்கிறார்கள்.

ஒரே நாளில், ஒரே நேரத்தில் பிறக்கிறவர்களின் வாழ்க்கைத் தரம் எவ்வளவோ வித்தியாசமாயிருப்பதற்குக் காரணம் வேறு என்ன சொல்ல முடியும்?

இளவரசர் அருள்மொழி வர்மரின் வாழ்க்கையில் இப்போது அத்தகைய சந்தர்ப்பம் ஒன்று நேர்ந்தது. தன் அருகில் நெருங்கிய யானைப் பாகனைத் தூக்கி எறிந்த போது, "யானைக்கு மதம் பிடித்துவிட்டது!" என்ற கூச்சல் கிளம்பியபோது, அந்தச் சந்தர்ப்பம் அவரை வந்தடைந்தது. அதை அவர் பயன்படுத்திக் கொள்ளாமல் விட்டிருந்தால், இந்த வரலாறு வேறுவிதமாகப் போயிருக்கும். தமிழ் நாட்டின் சரித்திரத்தில் இராஜராஜ சோழர் உன்னத ஸ்தானத்துக்கு வந்திருக்கவும் முடியாது.

அதிர்ஷ்டவசமாக அந்தச் சந்தர்ப்பத்தைத் தெரிந்து கொண்டு அதை உபயோகப்படுத்திக் கொள்ளும் சமயோசித அறிவாற்றல் அவரிடம் இருந்தது. படகோட்டி முருகய்யன் முதல் நாள் கூறிய வரலாற்றை நினைவுபடுத்திக் கொண்டார். யானையை நெருங்கி வந்தவன் உண்மையான யானைப்பாகன் அல்ல, ஏதோ தீயநோக்கத்துடன் வந்தவன், அதனாலேதான் யானை அவனைத் தூக்கி எறிந்திருக்கிறது என்பதையும் ஒரு நொடியில் ஊகித்துக்கொண்டார். வந்தவன் யார், எதற்காக வந்தான் என்பதையெல்லாம் அச்சமயம் கண்டுபிடிக்க முயன்றால், கிடைத்த சந்தர்ப்பம் தவறிபோய்விடும். "யானைக்கு மதம் பிடித்துவிட்டது!" என்ற கூச்சலினால் மக்களிடையே உண்டான குழப்பத்தைப் பின்னர் பயன்படுத்திக் கொள்ள முடியாது. அந்த ஜனக்கூட்டத்தினிடையிலிருந்து தப்பிச் சென்று கூடிய விரைவில் தஞ்சையை அடைவது அச்சமயம் அவருடைய பிரதான நோக்கமாயிருந்தது. அந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள இதைக் காட்டிலும் சரியான சந்தர்ப்பம் கிடைக்கப் போவதில்லை.

ஆதலின், முருகய்யனைத் தம் அருகில் அழைத்து, அவன் காதோடு ஏதோ சொல்லிவிட்டு, அவன் தோள்மீது ஏறி யானையின் மீது தாவினார். அப்படித் தாவும் போதே யானை மேலிருந்த அம்பாரியைத் தட்டிவிட்டார். அம்பாரி கீழே விழுந்து உருண்டது.

பின்னர், யானையிடத்திலும் அதன் பாஷையில் ஏதோ சொன்னார். உடனே யானை பிய்த்துக் கொண்டு கிளம்பியது. முன்போல, பயங்கரமான குரலில் பிளிறிக் கொண்டே விரைவாக நடந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் ஓடவே தொடங்கிவிட்டது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஏரிக்கரையில் பேய்



உடம்பெல்லாம் வேர்த்து விறுவிறுத்து மூச்சு முட்ட அந்தக் கிழவர் ஓடோடி வந்தார். ஏரிக்கரைக்கு பெர்ரிப் பழம் பறிக்கச் சென்றவர் சிறிது நேரத்தில் இப்படி ஓடி வந்தார். அவர் கண்களில் மருட்சி தெரிந்தது. எதையோ கண்டு பயந்து ஓடி வந்ததுபோல் இருந்தது. சிற்றூர் மக்கள் கூட்டம் கூடி விட்டனர்.

"தாத்தா! என்ன ஆயிற்று! ஏன் பயந்து ஓடி வருகிறீர்கள்?" என்று ஆளுக்கு ஆள் கேட்டார்கள்.

"பேய்! பேய்!" என்று கூவிய கிழவர் மூர்ச்சித்து மயக்கம் போட்டு விழுந்து விட்டார்.

அவர் முகத்தில் தண்ணீர் தெளித்தார்கள். சற்று நேரத்தில் மயக்கந்தெளிந்து கண் விழித்தார்.

"பேய்! பேய்! என்னைக் கொத்தி விட்டது! காலைப் பாருங்கள்" என்றார் கிழவர்.

காற்சட்டை பொத்தல் பொத்தலாக இருந்தது. காலிலும் இரண்டொரு இடத்தில் ஊசி குத்தியதுபோல் இருந்தது. சிறிது இரத்தமும் வெளியில் வந்து காய்ந்திருந்தது.

"என் காலைப் பேய் கொத்தியது, காற்சட்டை கிழிந்து விட்டது! நான் உயிர் தப்பி ஓடிவந்து விட்டேன்!" என்றார் கிழவர்.

கிழவர் சொல்வதை யாராலும் நம்ப முடியவில்லை. பொதுவுடைமைக் கட்சிக்காரர்கள், புரட்சி அரசை ஏற்படுத்தி இருபது ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆட்சிக்கு வந்ததுமே நாட்டில் இருந்த பேய்களையெல்லாம், வெடிவைத்துச் சுட்டுப் பொசுக்கி விட்டார்கள். எல்லாப் பேய்களும் ஒழிந்து போய் விட்டன. இது வரை கடந்த இருபது ஆண்டுகளாக யாரும் பேய்கள் இருப்பதாகச் சொல்லவில்லை. அப்படியிருக்க இந்தக் கிழவர் பேயைப் பார்த்ததாகச் சொல்லுவதை யார் நம்ப முடியும்?

மேலும் பேய்கள் இருந்ததாகக் கருதப் பட்ட பழைய காலத்தில் அவை மனிதர்களையோ மாட்டையோ அறைந்து கொன்றதாகத் தான் கேள்விப் பட்டிருக்கிறோம். கொத்தியதாகவோ, காற்சட்டையைக் கிழித்ததாகவோ கேள்விப் பட்டதில்லை. ஆகவே இந்தக் கிழவர் சொல்லுவதை நம்பமுடியவில்லை என்று அந்த ஊர்க் கிழவிகள் கூறினார்கள்.

ஆனால், அன்று முதல் யாரும் ஏரிக் கரைக்குச் செல்லவில்லை. பெர்ரிப் பழம் பறிக்கும் வேலை நடைபெறவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு சொல்லச்சொல்லா தார்.

– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்ப்பாண நகர நிர்மாணத்தில் மக்களின் கருத்தை அறியுங்கள்

யாழ்ப்பாண நகரத்தின் கட்டமைப்பு என்பது இன்னமும் ஒழுங்குபடுத்தப்படாத ஒன்றாகவே உள்ளது.

அதிலும் யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையம் இட்டுமுட்டான இடத்திற்குள் முடங்கிக் கிடக்கிறது.

இந்நிலையில் நெடுந்தூர பேருந்துச் சேவைக்கான பஸ்தரிப்பு நிலையம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தை அண்மித்து அமைக்கப்பட்ட போதிலும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையும் தனியார் பஸ் உரிமையாளர்களும் இணைந்து, நெடுந்தூர சேவையை முன்னெடுப்பதில் இன்னமும் இணக்கப்பாடு ஏற்படவில்லை.

எனினும் நேற்று முன்தினம் (12.07.2026) யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, யாழ்ப்பாணத்தில் வைத்து கருத்துத் தெரிவிக்கையில், யாழ்.நெடுந்தூர பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து இணைந்த பஸ்சேவை நடைபெறுவதற்கான வாய்ப்புக் கிடைக்கப்பெற்றுள்ளதாகக் கூறியுள்ளார்.

தவிர, யாழ்ப்பாண புகையிரத நிலையம் பல்வகை போக்குவரத்து சேவை மையமாக மாறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதாவது, யாழ்ப்பாணப் புகையிரத நிலையம் பல்வகை போக்குவரத்துச் சேவை மையமாக மாறும் என்பது, புகையிரத சேவை – பேருந்து சேவை – முச்சக்கரவண்டி உள்ளிட்ட வாடகை வாகன சேவைகளை ஒரே இடத்தில் பயணிகள் பெறக்கூடியதான ஏற்பாட்டையே அமைச்சர் கூறியுள்ளார்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் கருத்தின் பிரகாரம் யாழ்.மத்திய பேருந்து நிலையம் யாழ்ப்பாணப் புகையிரத நிலைய வளாகத்தில் இயங்குவதற்கான ஏற்பாடுகள் இருப்பது போலத் தெரிகிறது.

ஆம், நெடுந்தூர பேருந்து சேவை யாழ்.வீரசிங்கம் மண்டபத்திற்கு அண்மையில் இயங்க, ஏனைய பஸ் சேவைகள் யாழ். புகையிரத நிலைய வளாகத்தில் புதிதாக கட்டமைக்கப்படும் பல்வகை போக்குவரத்து மையத்தில் இயங்கும் என்பதாகவே அமைச்சரின் கூற்றுக்குப் பொருள் கொள்ள வேண்டியுள்ளது.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கட்டாயம் கூறியாக வேண்டும்.

அதாவது இப்போது யாழ்ப்பாண நகரப் பகுதியில் யாழ்.புகையிரத நிலையத்திற்குச் சொந்தமான நிலப்பரப்பே வெற்றிடமாக உள்ளது.

எனவே புகையிரத சேவையுடன் பேருந்து சேவை மற்றும் இதர குறுந்தூர பயணிகள் சேவைகள் ஒரே இடத்தில் இயங்குவது உத்தமமானது.

ஆனாலும் அது தொடர்பில் துறை சார்ந்தவர்களினதும் வர்த்தகர்களினதும் பொது மக்களினதும் அபிப்பிராயங்களை – ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்குக் கட்டாயமாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

இதை விடுத்து அரச மட்டத்தில் தீர்மானங்களை எடுத்துவிட்டு அதனை நடைமுறைப்படுத்த முற்படும் போது அது விமர்சனத்திற்குரியதாக மாறும்.

ஆகையால், யாழ். நகர நிர்மாணம் உள்ளிட்ட எதிலும் பொது அபிப்பிராயத்திற்கு முன்னுரிமை கொடுப்பது கட்டாயமானது.

### அனைவருக்கும் பயனளிக்கும் வகையில்

# தரமான பொதுப் போக்குவரத்து சேவையை உருவாக்க வேண்டும்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் தரமான, பாதுகாப்பான மற்றும் வசதிகள் கொண்ட பொதுப் போக்குவரத்துத் துறையை உருவாக்க வேண்டும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் 2027ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கு முன்னதாக நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இதனை வலியுறுத்தினார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பொதுப் போக்குவரத்தை மேம்படுத்துவதன் மூலம் மக்கள் தனிப்பட்ட போக்குவரத்திற்காகச் செலவிடும் சுமையைக் குறைத்து, நாட்டில் தரமான போக்குவரத்துச் சேவையை உறுதிப்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டார்.

இலவச சுகாதாரச் சேவைக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் போலவே, பொதுப் போக்குவரத்துத் துறையின் முன்னேற்றத்திற்கும் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

2026 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறைத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து அதிகாரிகளிடம் ஜனாதிபதி விரிவாகக் கேட்டறிந்தார்.

பழைய பேருந்துகளைப் படிப்படியாக சேவையிலிருந்து நீக்கி, புதிய பேருந்துகளை இணைக்கும் திட்டம் மற்றும் நகர்ப்புற குறுகிய தூரப் பயணங்களுக்காக மெட்ரோ பேருந்துகளை அறிமுகப்படுத்தும் யோசனையும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்படும் அடுக்குமாடி குடியிருப்புத் திட்டங்கள், நகர்ப்புற கழிவு முகாமைத்துவம் மற்றும் City Branding திட்டங்களின் முன்னேற்றமும் ஆய்வு செய்யப்பட்டது.

அடுத்த ஆண்டுக்குள் நிறைவு செய்யக்கூடிய திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி நிதி ஒதுக்குமாறும் வெளிநாட்டுக் கடன் உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு தெளிவான பயன்கள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். (ம-7)

## வடக்கிற்கான ரயில் சேவைகள் இன்று முதல் வழமைக்கு

(கொழும்பு)

கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கிப் பயணிக்கும் நகராந்தர கடுகதி ரயில் சேவையை வாரத்திற்கு நான்கு நாட்களுக்கு மாத்திரம் வரையறுப்பதற்கு ரயில்வே நிர்வாகம் இதற்கு முன்னர் எடுத்திருந்த தீர்மானத்தை மாற்றி, இன்று(14) முதல் அதனை வழமை போல் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ரயில் இயந்திரத் தொகுதிகளில் தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறி, இதற்கு முன்னர் செவ்வாய் மற்றும் வியாழக் கிழமைகளில் இந்த ரயிலின் சேவையை நிறுத்துவதற்கு ரயில்வே நிர்வாகம் தீர்மானித்திருந்தது.

எவ்வாறாயினும், இந்தக் கட்டுப்பாடுகள் காரணமாக வடக்கு ரயில் பாதையைப் பயன்படுத்தும் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாவதாக ரயில்வே தொழிற்சங்கங்கள் நிர்வாகத்திற்கு சுட்டிக்காட்டியிருந்தன.

விடயங்களை கருத்திற்கொண்டு, இதற்கு முன்னர் இரத்து செய்யப்பட்டிருந்த செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளிலும் இந்த நகராந்தர கடுகதி ரயிலை இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு ரயில்வே அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதற்கமைய, பயணிகள் வழமை போன்று வார நாட்களில் எவ்வித தடையுமின்றி இந்த சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும். (ம-7)

## கலப்பட மிளகாய்த்தூள் புதுக்குடியிருப்பில் விற்பனை

### கைதான வியாபாரிக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறையும் அபராதமும்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பில் கலப்பட மிளகாய்த்தூள் விற்பனை செய்த வியாபாரிக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகர்களினால் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை சுகாதார பரிசோதகர்களால் சந்தேகத்தின் பேரில் மிளகாய்த்தூள் மாதிரிகள் எடுத்து ஆய்வகத்திற்கு அனுப்பி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனை முடிவுகளில் மிளகாய்த்தூளில் கலப்படம் செய்யப்பட்டிருந்தமை உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த பொருட்கள் நீர்கொழும்பிலிருந்து மொத்த விற் [illegible] யவந்தது.

மேலும் பொருட்களை விற்பனை செய்த மொத்த வியாபாரி உரிய அனுமதியின்றி கலப்பட உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததும் கண்டறியப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பகுதியில் மொத்த விற்பனை மேற்கொண்ட வியாபாரிக்கு எதிராக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் பொது சுகாதாரப் பரிசோதகர் சுரேஸ் ஆனந்தன் உள்ளிட்ட குழாமினர் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் குறித்த வியாபாரிக்கு 15,000 ரூபா அபராதமும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் [illegible] விதித் [illegible] (ம-7,299)

## மோ.சைக்கிள் விபத்தில் ஆசிரியர் உயிரிழப்பு

கேகாலை இப்பலோகம-கலவெவ வீதியில் நிகழ்ந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் பாடசாலை ஆசிரியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மரத்தில் மோதியதில் குறித்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் 29 வயதான ஆசிரியர் எனக் கூறப்படுகிறது. இச்சம்பவம் குறித்து இப்பலோகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிலை பாவனையிலிருந்து இளையோரை பாதுகாப்போம்

## இலங்கை மருத்துவ சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம்

**(கொழும்பு) ........................................**

**2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்த எவருக்கும் புகையிலை சார்ந்த உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதைத் தடை செய்யும் "புகையிலை சார்ந்த உற்பத்தி பொருட்கள் அற்ற தலைமுறை" கொள்கையை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை மருத்துவ சங்கம் ஜனாதிபதி அநுரகுமார திசா நாயக்கவிடம் விசேட கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.**

புகையிலை சார்ந்த உற்பத்திகள் உலகில் மிகவும் அழிவுகரமான பொருட்கள் என்றும், அதிலிருந்து இளம் தலைமுறையினரை பாதுகாக்க வேண்டியது அவசியம் என்றும் மருத்துவ சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் வருடாந்தம் சுமார் 20,000 பேர் புகையிலை சார்ந்த உற்பத்தி பொருட்களின் பாவனையினால் உயிரிழப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் புகையிலை சார்ந்த உற்பத்தி பொருட்களின் பாவனையினால் 2019 ஆம் ஆண்டில் மாத்திரம் 214 பில்லியன் ரூபாய் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இந்த விடயத்தில் ஜனாதிபதி உடனடியாகக் கவனம் செலுத்தி, அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இலங்கை மருத்துவ சங்கம் வலியுறுத்தியுள்ளது. (நி)



## விளக்க மறியல் உத்தரவுகளால் சிறைகளில் நெரிசல்

### மாற்று வழிகளை ஆராயுமாறு கோரிக்கை

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் தற்போது ஏற்பட்டுள்ள கடுமையான நெருக்கடி நிலைமைக்கு, ஒவ்வொரு சந்தேக நபரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸாரும் சட்டமா அதிபர் பிரிவும் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுப்பதே பிரதான காரணமாகும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறைப்படுத்தாமல் வெளியில் வைத்து விசாரணை செய்யக்கூடிய வழக்குகளும் இருக்கின்றன. குற்றத்தின் தன்மையைக் கருத்தில் கொண்டு, சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைக்காமல் வெளியில் வைத்திருந்தே அவ்வாறான வழக்குகளை விசாரணை செய்ய முடியும். எனினும், துரதிர்ஷ்டவசமாக நமது நாட்டில் சந்தேக நபர் ஒருவருக்கு வழங்கப்படும் முதல் தண்டனையாக விளக்கமறியலில் அடைப்பதன் ஊடாக சிறைப்படுத்துவதே தற்போதைய நடைமுறையாகக் காணப்படுகிறது.

பொலிஸாரும் தொடர்ச்சியாக ஒவ்வொரு சந்தேக நபரையும் விளக்க மறியலில் வைக்குமாறு கோருகின்றனர்.

இதன் காரணமாக சிறைச்சாலைகள் அனைத்தும் கொள்ளளவுக்கு அதிகமாக நிறைந்துள்ளதால், கைதிகளைப் பராமரிப்பதற்காக அரசாங்கத்துக்கு ஏற்படும் செலவுகளும் பெருமளவில் அதிகரித்துள்ளன.

மறுபுறம், ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருள் குற்றச்சாட்டுகளும் அது சார்ந்த சந்தேக நபர்களின் எண்ணிக்கையும் சடுதியாக அதிகரித்துள்ளன.

தற்போது சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் பெரும்பான்மையானவர்கள் இவ்வாறான போதைப் பொருள் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்களேயாவர்.

எனவே, இப்பிரச்சினைக்கு முறையானதொரு தீர்வாக, அவசியமற்ற முறையில் சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்கும் நடைமுறையைத் தவிர்த்து, அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை நேரடியாக நீதிமன்றத்தின் ஊடாக விசாரணை செய்வது அவசியமாகும். இது குறித்த பல முன்மொழிவுகள் தற்போது நீதி அமைச்சில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார். (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3379

**கருடா**

பனி மூட்டமாக இருப்பது ஒரு வகையில் நல்லதா போச்சா... எப்படி மன்னா?
புறமுதுகிட்டு ஓடி வந்த என்னை கண்டு பிடிக்க முடியாம எதிரி திரும்பி சென்று விட்டானே அமைச்சரே?



**ஸ்ரீமத்**

மழை நல்லா வரணும்னு தினமும் வேண்டிக்கிறியே யாருண்ணே நீ இயற்கை ஆர்வலரா?
ரெயின் கோட் விக்கிறவன்டா நானு...



**சரவணா**




**விரு**

கடவுள் ஒரு கதவை மூடினா இன்னொரு கதவை திறப்பாராம்.



எனக்கெல்லாம் எல்லா கதவையும் மூடிட்டு சாவிய தொலைச்சிட்டாரு போல...

**நதீஸ்**

கணவன்-காலெண்டர்ல என்ன பாக்கிற?
மனைவி- பல்லி விழும் பலன்...



கணவன்-கொண்டா.. நான் பாக்குறேன்..
அது சரி.. பல்லி எங்க விழுந்தது?
மனைவி- நீங்க சாப்பிட்ட சாம்பாரில

**குறிஞ்சிநிலா**

பணமும் ஞாயிற்றுக்கிழமையும் ஒன்று தான்.



வாறதும் தெரியாது போறதும் தெரியாது.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வீடமைப்புத்...

ஆரம்பிக்கப்பட்டதாக வீடமைப்பு, நிர்மாண மற்றும் நீர்வழங்கல் பிரதி அமைச்சர் டி.பி.சரத் குறிப்பிட்டார்.

எனினும், குறித்த வீடுகளில், அநேகமானவற்றின் நிர்மாணப் பணிகள் ஆரம்ப கட்டத்திலேயே, கைவிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இடைநிறுத்தப்பட்டுள்ள இந்த வீடமைப்புத் திட்டங்களை விரைவாகப் பூர்த்தி செய்து, பயனாளிகளுக்கு நிரந்தர வீடுகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில், குறித்த வீடுகளின் உரிமையாளர்கள் தொடர்பான தரவுகள் சேகரிக்கப்படுவதாகப் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிலையில், 2027 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் வீடமைப்புத் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டை இரண்டு மடங்காக அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகப் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.


அதற்கமைய, ஏற்கெனவே இடைநிறுத்தப்பட்டுள்ள ஆறாயிரம் வீடுகளில், மூவாயிரம் வீடுகளுக்கான நிர்மாணப்பணிகளை, அடுத்த வருடத்தின் இறுதிக்குள் முழுமையாக நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தவர்களில் சுமார் 13 ஆயிரம் குடும்பங்களுக்கான வீட்டுத் தேவை உள்ளதாக ஏற்கெனவே அறிக்கையிடப்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

இந்தநிலையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் வீட்டுத் தேவைக்கான உண்மையான தரவுகளை மாவட்ட செயலாளர்களிடம் கோரியுள்ளதாகவும் பிரதி அமைச்சர் கூறினார்.

மாவட்ட செயலாளர்களிடமிருந்து கிடைக்கும் தரவுகளுக்கமைய, வீடமைப்புத் திட்டங்களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என வீடமைப்பு, நிர்மாண மற்றும் நீர்வழங்கல் பிரதி அமைச்சர் டி.பி.சரத் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)



















## வயதான...

இலங்கையின் மிக வயதான பெண்மணியாகக் கருதப்பட்ட புஞ்சாகே கலுமெனிகா காலமானார்.

1912 ஆம் ஆண்டு ஜூலை 4 ஆம் திகதி பிறந்த இவர், உயிரிழக்கும் போது 114 வயதை எட்டியிருந்தார்.

ரம்பேவ, சங்கிலிகனதராவ பகுதியைச் சேர்ந்த குறித்த பெண் 12 பிள்ளைகளின் தாயாவார். இவர், தனது வாழ்நாளில் 325 பேரப்பிள்ளைகளையும் பூட்டப்பிள்ளைகளையும் நேரில் காணும் பாக்கியத்தைப் பெற்றிருந்தார். (ம-7)

## மன்னாரில்...

ஒருவர் உயிரிழந்துள்ளார்

இதில் தெலிகடைப் பகுதியைச் சேர்ந்த 22 வயது இளைஞனே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் மன்னார் நோக்கிப் பயணித்த பேருந்து ஒன்று பள்ளிக்குடாச் சந்தியில் வலது புறமாகத் திரும்புவதற்கு முற்பட்டபோது, அதன் பின்னால் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது, மோட்டார் சைக்கிள் சாரதி பலத்த காயமடைந்துள்ளதுடன், பின்னால் பயணித்தவருடம் உடனடியாக மீட்கப்பட்டு, பூநகரி வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

அங்கு அவர்களுக்கு முதலுதவி அளிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று (13) தெலிகடைப் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய மோட்டார் சைக்கிள் சாரதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பேருந்து சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## "ஐஸ்"...

மாதம் 14 ஆம் திகதி, 5 கிராமுக்கும் அதிகமான 'ஐஸ்' போதைப்பொருளைத் தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் கைதான நபருக்கே குறித்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கின் விசாரணைகள் மன்னார் நீதிமன்றில் இடம்பெற்று வந்த நிலையில், குற்றவாளிக்கு எதிரான சாட்சியங்களையும் சான்றுகளையும் அரச சட்டவாதிகளான தேவ விதுரன் மற்றும் ஆறுமுகம் தனுஷன் ஆகியோர் நேர்த்தியாகவும் வலுவாகவும் நெறிப்படுத்தி நீதிமன்றத்தின் முன் சமர்ப்பித்திருந்தனர்.

இதேநேரம் அரசு தரப்பால் முன்வைக்கப்பட்ட ஆதாரங்கள் அனைத்தும் குற்றவாளியின் மீதான குற்றச்சாட்டுகளைச் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிப்பதாக அமைந்திருந்தன.

இவ்வழக்கின் அனைத்துப் பரிமாணங்களையும், சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகளையும் மிக ஆழமாக ஆராய்ந்த மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா, குற்றச்சாட்டுகள் அனைத்தும் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்து குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பை அறிவித்தார். (ம-7,33)

## நாட்டில்...

வைத்திய நிபுணர் சத்யா ஹேரத்தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த விசேட வைத்திய நிபுணர், இவர்களில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலிருந்தே அதிகளவான தொற்றாளர்கள் பதிவாகி வருவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 2023 ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதியில் எச்.ஐ.வி தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர்,

இவர்களில் பெண்களை விட ஆண்களிடையே இத்தொற்று அதிகமாகக் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பற்ற உடலுறவு கொள்வதே எச்.ஐ.வி தொற்று ஏற்படுவதற்கான முக்கிய காரணமாகக் கருதப்படலாம் எனக் கூறிய வைத்திய நிபுணர், இது தவிர பாதுகாப்பற்ற பாலியல் நடத்தைகள் மற்றும் போதைப்பொருள் ஊசி ஏற்றும் முறைகளின் போது ஊசிகள், சிரிஞ்சுகள் மற்றும் பிற உபகரணங்களை ஒத்ததாகப் பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்து கொள்ளுதல் போன்றவையும் இதற்குப் பங்களிப்பதாகக் கூறினார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உங்கள் பெற்றோர் உங்கள் வாழ்க்கை.....

அவர்களின் வாழ்க்கையைப் பாதுகாப்பாக மாற்றுவது எங்கள் பொறுப்பு

Royal Elders
Care Home



- 24 மணிநேர கவனம்
- மருத்துவ சேவை
- சத்தான உணவு
- பாதுகாப்பான சூழல்

அன்பு,
மரியாதை,
பராமரிப்பு
அனைத்தும் ஒரே இடத்தில்

**ROYAL ELDERS CARE HOME**

"அவர்கள் சிரிப்புத்தான் எங்கள் வெற்றி"

*ROYAL ELDERS CARE HOME*

Wher care meets Dignity & Comfort

PREMIUM ELDER CARE SERVICES

- 24/7 Professional care
- Healthy & Hygienic Food
- Medical Support
- Peaceful and Safe Environment

பெண்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளது.

076 346 6379

Vempan Road, Urumpirai South.

(2513)


## தமிழினப்...

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி கோரி கடந்த ஆண்டு "நீதியின் ஓலம்" முன்னெடுக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி தொடங்கி 17ஆம் திகதி வரை தொடர்ந்து நான்கு நாட்கள் "நீதியின் ஓலம் 2" எனும் போராட்டத்தின் வாயிலாக, தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி கோரும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

இறுதி நாளான 17ஆம் திகதி மாபெரும் பேரணியும் நடைபெறவுள்ளது.

ஆரம்ப நாளான 14ஆம் திகதி மாலை 4 மணிக்கு செம்மணியில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ச்சியாக நான்கு நாட்கள் நடைபெற்று, இறுதி நாளான 17ஆம் திகதி தமிழர் தாயகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இருந்து மக்கள் திரண்டு வருகை தந்து மாபெரும் பேரணி யாழ் நகரில் இடம்பெறும்.

இந்தப் போராட்டத்திற்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு தர வேண்டும் என தாயகச் செயலணியினர் கோரிக்கை முன்வைத்தனர். (ம-7,33)

## விவசாயிகளுக்...

டி.பி.சரத் இதனைத் தெரிவித்தார்.

இந்த வங்கியின் ஊடாக ஒரு ஏக்கர் விவசாய நிலத்திற்கு ஒரு இலட்சம் ரூபா உற்பத்திச் செலவை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

மேலும், சீனாவுடன் கலந்துரையாடி ஒவ்வொரு விவசாயத் திட்டத்திற்கும் "விவசாய உபகரண மத்திய நிலையம்" ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ம-7)


**வீட்டுப் பணிப் பெண் தேவை**

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு (சகல வேலைகளும் செய்யக்கூடிய பணிப் பெண் தேவை) 25 - 50 வயதிற்குட்பட்டோர் தேவை. சம்பளம் 60,000.00

தொடர்புகளுக்கு:- (8037)

076 879 9693

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

வட்டுக்கோட்டை சங்கரத்தைச் சந்திக்கு அருகில் 3¼ பரப்புக் கொண்ட வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: (8040)

076 023 3301

**காணி விற்பனைக்கு**

யாழ். மருத்துவ பீடத்திற்கு முன்னால் உள்ள கருவம்புலம் லேனில் காணி விற்பனைக்குண்டு.


தொடர்பு :

077 662 4387

077 162 9385

(8043)


# மரண அறிவித்தல்



தோற்றம் : 10.02.1930 | மறைவு : 13.07.2026

## திருமதி இராஜபூபதி பரமேஸ்வரன் (பூமணி)

நவற்கிரி, புத்தூரைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய், சிலாபம், தோப்பு (அச்சுவேலி) கொக்குவில் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜபூபதி பரமேஸ்வரன் அவர்கள் 13.07.2026 திங்கட்கிழமை கொக்குவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சிவக்கொழுந்து இணையர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற சீனிவாசகம் செல்லம்மா இணையர்களின் மருமகளும் உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்ற பரமேஸ்வரன் (பொதுச்சுகாதார பரிசோதக மேற்பார்வையாளர் - SPHI) அவர்களின் அன்பு மனைவியும் தனலட்சுமி, காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், புவனேஸ்வரி, வேலும்மயிலும் ஆகியோரின் சகோதரியும் சுகன்னியா (கொக்குவில்), வத்சலா (கனடா), தாட்சாயினி (கனடா), சநாநதி (ஆசிரியை - யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்), நாகபூஷணன் (உரிமையாளர் - மூங்கில் சூப்பர் சென்ரர், புத்தூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும்

சிவானந்தன், (ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர்), நவநாதன் (கனடா), சந்திரபாலன் (கனடா), கங்காதரன் (முகாமையாளர் - மூங்கில் சூப்பர் சென்ரர், புத்தூர்), சுகிர்தா (ஆசிரியை - யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஆகியோரின் அன்பு மாமியும் சிகேஷ் (ஆசிரியர் - வவு/பாவற்குளம் கணேஷ்வரா மகா வித்தியாலயம்), பிரித்திகா (ஆசிரியை - மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி) - நிஷாந்தன், பவ்வியா - கமலேஷ், வர்மன், சேரன் - கீர்த்தனா, ஆரூரன் - காருண்யா, சங்கவி, கவிதரன், பதுமிகா, ஆதித்யன், சாகித்யன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அவ்யன், மைதிலி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (14.07.2026) செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணியளவில் கிரியைகள் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் நவற்கிரி நிலாவரை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 88/3,
மணியகாரன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(8042)

தகவல் : குடும்பத்தினர்
077 922 8872 - மகள்
077 742 3612 - மகன்
077 715 2342 - மகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.